**செ. கு. எண்:** 141 **நாள்:**11.04.2012

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 11.4.2012

இன்று (11.4.2012) பிற்பகல் 2 மணியளவில் இந்தோனேசியாவின் வட சுமத்ராவின் மேற்கு கடற் பகுதியில் ரிக்டர் அளவில் 8.7 திறன் கொண்ட கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டதையடுத்து, ஐதராபாத்தில் உள்ள இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையம் (Indian National Centre for Ocean Information Services), சுனாமி உஷார் நிலை எச்சரிக்கையை (Tsunami Alert) விடுத்தது.

இதனைத் தொடர்ந்து, தமிழகக் கடற்கரையை சுனாமி தாக்கும் என்ற நிலை இல்லாத போதும், ஊஷார் நிலை எச்சரிக்கையின் அடிப்படையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைந்து எடுக்க அரசு உயர் அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டேன். அதன் அடிப்படையில், கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உஷார்படுத்தப்பட்டனர். கடற்கரை பகுதிகளுக்கு எவரும் செல்ல வேண்டாம் என மாவட்ட நிர்வாகத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எந்தவித அவசர சூழ்நிலையையும் எதிர்கொள்ளக் கூடிய வகையில், தயார் நிலையில் இருக்கும்படி அரசு அலுவலர்கள் மற்றும் மருத்துவமனை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் சமயத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த செயல்முறைத்

திட்டத்தினை (Contingency Plan) நடைமுறைப்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சென்னை நகரிலும், கடற்கரையில் இருந்த மக்களை அங்கிருந்து செல்லும்படி ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

**8.7.** திறன் கொண்ட பெருமளவிலான நில நடுக்கம் ஏற்பட்ட பின் அதனைத் தொடர்ந்து சிறு சிறு நடுக்கங்கள் ஏற்படுவது வாடிக்கை தான். இதைப் போன்ற சிறு நில நடுக்கங்கள் சென்னை உட்பட தமிழ்நாட்டில் சில இடங்களில் உணரப்பட்டன. சுனாமி ஏற்படக்கூடிய வாய்ப்பு இல்லை என்றாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து எந்த நிலைமையையும் சமாளிக்கக்கூடிய வகையில் அரசு இயந்திரம் தயார் நிலையில் உள்ளது.

எனவே, பொதுமக்கள் யாரும் சுனாமி குறித்து எந்தவித பீதியும், அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**